**<u>இந்திய உயர் ஸ்தானிகராலயம்</u>**

**<u>கொழும்பு</u>**

ஊடக அறிக்கை

**************************

இலங்கையில் அண்மையில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பெற்றுக்கொண்ட பெருவெற்றி குறித்து வாழ்த்துக்களை தெரிவிப்பதற்காக இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ கோபால் பாக்லே அவர்கள் இலங்கை பிரதமர் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்களை இன்று மாலை சந்தித்தார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வினைத்திறன் மிக்க தேர்தல் செயற்பாட்டினையும் இலங்கை அரசாங்கம் வெற்றிகரமாக தேர்தலை நடத்தியமையையும் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் பாராட்டியமையை உயர் ஸ்தானிகர் அவர்கள் இந்த சந்தர்ப்பத்தில் நினைவூட்டியிருந்தார்.

மிகவும் பரந்தளவிலான இருதரப்பு ஒத்துழைப்பினை மேலும் வலுவாக்குவதற்காக இலங்கையின் புதிய பாராளுமன்றத்துடனும் அரசாங்கத்துடனும் இணைந்து செயற்பட இந்திய அரசாங்கத்தின் ஈடுபாடு மற்றும் வலுவான உறுதிப்பாட்டினை இந்திய உயர் ஸ்தானிகர் அவர்கள் மீண்டும் வலியுறுத்தியிருந்தார். அத்துடன் இவ்விடயம் தொடர்பாக இலங்கையின் தலைமைத்துவத்தின் தொடர்ச்சியான வழிகாட்டுதல்களை எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். கொவிட் 19 காரணமாக மேலெழும் மிக மோசமான பொருளாதார சவால்களை எதிர்கொள்ளல் உள்ளிட்ட விடயங்களை கையாளுதல் போன்ற விடயங்களில் இருதரப்பு ஈடுபாட்டினை இருநாடுகளும் மேம்படுத்துவதற்கான புதிய வாய்ப்புக்களை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் பெற்றுக்கொண்ட வலுவான ஆணை வழங்கியுள்ளது.

**************

சகவருடம் 1942 சிராவண 17

8 ஆகஸ்ட் 2020